**தலைப்பு 326 – சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 326 – சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 09 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும், பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 233.80 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 226.60 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 7.20 மில்லியன் அதாவது 3.08 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 221.51 | 214.70 | 6.81 | 3.07 |
| மூலதனம் | 12.29 | 11.90 | 0.39 | 3.17 |
| மொத்தம் | 233.80 | 226.60 | 7.20 | 3.08 |

### 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 32601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 10.18 | 10.17 | 5.78 | 7.01 | 40.00 | 21.86 |

### 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 473,434 ஆக இருந்தது.

### 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 64,483 ஆக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

மூலதன செலவின விடயமொன்றிற்கும் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காகவும் மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பானது அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 20 சதவீதம் முதல் 100 சதவீதமான வரையான வீச்சளவில் சேமிக்கப்பட்டிருந்தன.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

32601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 270,661 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து வந்த போதிலும், அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் அவ் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

### (ஆ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்

குருணாகல் தெலியாகொன்ன பௌத்த விஹாரை வளவில் சமுதாயம்சார் சீர்திருத்த நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 331,575 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட 12 பேர்ச் அளவிலான காணித் துண்டு அரசிற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்நிர்மாணத்திற்காக பொருத்தமான இடப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 590,207 ஆக இருந்தது. அப்பொறுப்புக்களை தீர்வுசெய்யும் போது ரூபா 35,972 தொகையான மேலதிகக் கொடுப்பனவொன்றும் இடம்பெற்றிருந்தது.

## 3.6 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2)(இ) | 474,563 | வெவ்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த செயல் நிமித்த கட்டுநிதிகள் உரிய செயற்பாடு முடிவடைந்தவுடன் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(2)(ஈ) | 478,325 | 38 சந்தர்ப்பங்களில் பதவிநிலை தரமில்லாத உத்தியோகத்தர்களுக்கு செயல் நிமித்த கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. |

## 3.7 செயலாற்றல்

2015 இன் வருடாந்த பாதீட்டு மதீப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

2015 ஆம் ஆண்டிற்காக சமுதாயம்சார் சீர்திருத்த கட்டளை அளவை அதிகரித்துக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 800,000 நிதி ஏற்பாடு மேறகொள்ளப்பட்டிருந்தது. அந்நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 138,813 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய செயற்பாடு 97 பிரதேச அலுவலகங்களில் செயற்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அது 29 அலுவலகங்களில் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

### (ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படாமை

அலுவலக முறைமையை மேம்படுத்துவதன் கீழ் கணனி வலையமைப்பிற்காக ரூபா 800,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளைத் தயாரிப்பதில் தாமதம்

திணைக்களத்தினால் மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய 2015 திசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்க கூற்று 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலதாமதத்தின் பின்னர் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

திணைக்களத்தினால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட 01 வருடம் வரையான கால

வீச்சிலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 3,389,503 ஆன இனங்காணப்படாத வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த வைப்புக்கள் மற்றும் ரூபா 50,181 கூட்டுத்தொகையான வங்கியால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்களத்தின் புத்தகங்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) காலாவதியான காசோலைகள்**

திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த போதும், கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 21,110 கூட்டுப்பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வைப்புச் செய்யப்பட்ட போதும் தீர்வையாகாத காசோலைகள்**

திணைக்களத்தினால் 6 மாதங்களுக்கு முன்னர் ரூபா 5,770 கூட்டுப்பெறுமதியான 04 காசோலைகள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் தீர்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 02 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 124 | 114 | 10 |
| (iii) | இரண்டாம் நிலை | 468 | 387 | 81 |
| (iv) | ஆரம்ப நிலை | 11 | 09 | 02 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக / ஒப்பந்த அடிப்படை) | - | - | - |
| | மொத்தம் | 607 | 512 | 95 |